# OCTOBER 1991

148

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION, OCTOBER 1991.

Paper II — GUNAPADAM THATHU

Part II

Time : Three hours. Maximum : 100 marks.

Answer ALL questions.

1. (அ) பஞ்ச சூதங்களைக் குறிப்பிட்டு அவற்றின் சுத்தி முறைகளை விளக்குக. (10)

(ஆ) சண்ட மாருதத்தில் சேரும் சரக்குகள், செய்முறை, அளவு, தீரும் நோய்களை விளக்குக. (10)

2. கருந்தாதின் பொதுப்பண்பு, செய்கைகள், சேரும் மருந்துகள், அளவு, தீரும் நோய்களை விளக்குக. (15)

3. சூழும், மதுரைப்பொது, வாசுகி — இவை எவற்றைக் குறிப்பன? அவற்றைப் பற்பமாக்கும் முறை, அளவு, தீரும் நோய்கள், பத்தியத்தை விளக்குக. (15)

4. (அ) கந்தகத்தின் சுத்தி முறையை விளக்குக. (10)

(ஆ) கந்தக இரசாயனம் — சேரும் சரக்குகள், செய்முறை, வழங்கும் அளவு, தீரும் நோய்களை விளக்குக. (10)

5. லோகமாரணம், செயநீர், பன்னிரண்டுவகை எண்ணெய்கள், மருந்துகளின் வாழ்நாள் இவற்றை விளக்குக. (15)

6. அன்னபேதிச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், வங்கி பற்பம், வெடியுப்புச் சுன்னம், அமிர்தவெண்ணெய் இவற்றின் மருத்துவப்பயனை விளக்குக. (15)

---

**APRIL 1993**

[RS 596]

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper II — GUNAPADAM — THATHU—II

Time : Three hours. Maximum : 100 marks.

Answer ALL questions.

1. மருந்து எத்தனை வகைப்படும்? அகமருந்தின் ஆயுட்கால அளவுகளை விளக்குக. (20)

2. அயத்தின் வேறுபெயர்கள், கிடைக்கும் இடங்கள் மற்றும் நட்புச் சரக்கு, பகை சரக்குகளைக் கூறி, பொது குணத்தை விளக்குக. (20)

3. உலோகங்கள் எத்தனை வகைப்படும்? உலோகங்களைப் பற்றி விளக்குக. (20)

4. வெள்ளைப்பாடாணத்தின் வேறுபெயர்கள், சுத்தி முறைகள் அதனைக் கொண்டு செய்யப்படும் முக்கியமான இரண்டு மருந்துகளைக்கூறி, மருத்துவப் பயனைக் கூறுக. (20)

5. கருநிமிளை என்றால் என்ன? கருநிமிளையின் பொதுக் குணங்கள், சுத்திமுறை மற்றும் அதன் உபயோகங்களை விளக்குக. (20)

---

**APRIL 1995**

[SB 654]

## THIRD B.S.M.S DEGREE EXAMINATION

## Paper II — GUNAPADAM THATHU—II

### Part II

Time : Three hours. Maximum : 100 marks.

Answer ALL questions.

1. உலோகங்களை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? இலக்கிய ஆதாரத்துடன் விவரிக்க. (15)

2. (அ) தங்கம் கிடைக்குமிடம், சுத்தி செய்யும் மருந்து உபயோகிக்கும் முறை அளவு, தீரும் நோய்கள் கூறுக. (8)

   (ஆ) கருவங்கம், காந்தம், வசம்பு இவற்றின் சுத்தி முறைகளையும் சேரும் மருந்துகளையும் விவரி. (7)

3. (அ) அயகாந்த செந்தூரம், அயவீரச் செந்தூரம் செய்யும் முறை சேரும் சரக்குகள், வழங்கும் முறை அளவு, தீரும் நோய்கள் கூறுக. (8)

   (ஆ) வயதுக்குத்தக்கபடி மருந்துகளின் பிரமாணத்தைக் கூறுக. (7)

4. சண்டமாருதம், இலிங்கம், தாளகம் இதனை எவ்விதம் தூய்மை செய்வீர்கள், இதனைக்கொண்டு செய்யும் மருந்து, செய்முறை, அளவு, தீரும் நோய்கள் பத்தியம் கூறுக. (15)



5. வான்மெழுகில் சேரும் மருந்துகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, செய்யும் முறை, அளவு, பத்தியம், தீரும் நோய், கொடுக்கவேண்டிய அளவு, காலம் பற்றிக் கூறுக. (20)

6. குன்மகாலன் என்று சொல்லப்படும் உலோகத்தை குன்மத்திற்கும், சுவாசகாசத்திற்கும் எவ்விதம் செய்து பயன்படுத்துவீர்? உபயோகிக்கும் முறையையும், பத்தியம், அளவு, காலம் பற்றி விவரிக்க. (20)

———

## NOVEMBER 1995

[MB 1039]

# Third B.S.M.S. Degree Examination

## Paper II - GUNAPADAM THATHU II

### Part II

Time : Three hours Max : 100 marks

Answer All questions

1. வெள்ளைப்பாடாணம், வெள்ளி, பவழம், கந்தகம் இவற்றின் சுத்திகளையும், பொதுக்குணம், வெள்ளைபாடாணம், கந்தகம் தனித்தனியாக இவற்றைக் கொண்டு செய்யும் மருந்தின் பெயரையும், செய்முறையையும் தீரும் நோயையும் எழுதுக. (15)

2. பிரமானந்த பைரவம், சாதிசம்பீரக்குழம்பு, பரங்கிப்பட்டை பதங்கம், மஹா ஏலாதி மாத்திரை இவற்றில் சேருகின்ற மருந்துகளையும், செய்முறைகளையும், தீரும் நோய்களையும் கூறுக. (20)

3. இரசகெந்திமெழுகு, பஞ்சசூதமெழுகு, நந்திமெழுகு இவற்றில் சேருகின்ற சரக்குகளையும், செய்முறைகளையும், அளவு, பத்தியம், தீரும் நோய்கள், கொடுக்க வேண்டிய காலம்-விவரி. (20)

4. தாளகத்தின் வகைகள், சுத்திமுறைகள், பொதுக்குணம், தாளகக்கட்டு, தாளகக்கருப்பு, செய்முறை, துணைமருந்து தீரும் நோய்கள் விவரி. (15)

5. ரத்தவிருத்தி, நரம்பு தளர்ச்சை, விரணம் இவற்றிற்கு பயன்படும் தாதுப்பொருட்கள் மும்மூன்றைக் கூறி, இதனால் செய்யப்படும், ஒவ்வொன்றின் மருந்தின் செய்முறையையும் விவரித்து எவ்வடிவத்தில் எவ்வளவு அளவு கொடுக்க வேண்டும் என்று எழுதுக. (15)

6. இலிங்கம், பூரம், அயம், வீரம்-இவற்றைக்கொண்டு செய்யும் மருந்துகளின் பெயர்களையும், உதாரணத்திற்கு ஒவ்வொன்றின் செய்முறைகளையும், தீரும் நோயையும் எழுதுக (15)

———

## APRIL 1996

**[AK 1049]**

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper II —GUNAPADAM THATHU — II

Part II

Time : Three hours　　　　Maximum : 100 marks

Answer ALL questions.

1. அனுபானம் துணைமருந்து என்றால் என்ன? அவைகளின் பயன் என்ன? மருந்துகளுக்கு கையாளப்படும் அனுபானம், துணைமருந்துகள் ஆகியவைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரி. (15)

2. உலோகங்களில் துவர்ப்பு, புளிப்பு சுவை உடையவைகள் யாவை? அவைகளில் நிறைந்த வன்மை உடைய உலோகத்தின் பொதுகுணம், சுத்தி, சேரும் மருந்துகள் மூன்றைப் பற்றி எழுதுக. (15)

3. பஞ்ச சூதத்தில் கார்ப்பு உவர்ப்பு சுவை உள்ளவைகளை எழுதி, சுத்தி முறையை கூறுக. பூ விந்து சேரும் மருந்துகளை கூறி செய்முறைகளை எழுதுக. (15)

4. (அ) பிரமை நோயில் கந்தகபற்பத்தின் ஆட்சியை கூறுக. (10)

(ஆ) இடுமருந்துக்கு சிறப்பாக வழங்கும் உபரசம் எது? அதை உபயோகிக்கும் விதத்தைக் கூறுக. (10)

5. தேரன் யமக வெண்பாவில் கூறியபடி பவளபற்பம் செய்யும்முறை, அனுபானம், அளவு, தீரும் நோய்கள் கூறுக. (15)

6. சிறு குறிப்பு : (20)

(அ) வெங்கார மாத்திரை

(ஆ) குன்ம குடோரி மெழுகு

(இ) கௌவுரி மெழுகு

(ஈ) தாளக கட்டு

(உ) விஷக் குழம்பு.

---

# APRIL 1997

**[MP 1109]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part II

Paper II — GUNAPAADAM DHAATHU – II

Time : Three hours — Maximum : 100 marks

Answer Section A and B separately.

Answer ALL questions.

## SECTION A

1. மருந்து என்றால் என்ன? மருந்துகளின் வீரியத்தை அதிகரிக்கச் செய்யக் கூடிய வழி முறைகளைக் கூறி மருந்து செய்வதற்கு அவைகளின் பங்கை எடுத்து கூறி மருந்து களின் ஆயுள் காலத்தை எழுதுக. (20)

2. உலோகங்களில் கைப்பு சுவை உடைய இரண்டைக் கூறி அவைகளின் பொதுக் குணம் சுத்தி, சேரும் மருந்து களைக் கூறி உபயோகிக்கும் விதத்தை எழுதுக. (15)

3. வன்னிக் கர்ப்பம் என்றால் என்ன? வன்னிக் கர்பத்தின் பொதுக் குணம், சுத்தி முறைகள், செந்துரம் மற்றும் சேரும் மருந்துகளை எழுதி அளவு, துணைமருந்து, அனுபானம், தீரும் நோய்களை எழுதுக. (15)

## SECTION B

4. சிலா சத்தின் வகைக்களைக் கூறி அவைகளின் சுத்தி குணம், அனுபானம், தீரும் நோய்கள் விளக்கமாக விவரி. (20)



**[MP 1109]**

5. முத்தின் பிறப்பு, முத்து கிடைக்கும் இடம், முத்தின் சோதனை, சுத்தி, முத்து பர்பம் செய்யும் விதம், அளவு, அனுபானம், தீரும் நோய்கள் எழுதுக. (15)

6. சிறு குறிப்பு :

நவஉப்பு மெருகு

படிகாய் பற்று

சிவனார் அமிர்தம்

பூரக்கட்டு

கந்தக சுடர் தைலம். (15)

OCTOBER 1997

# [MS 1109]

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part II

Paper II — GUNAPAADAM – DHAATHU

குணபாடம் – தாது

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. தாதுப் பொருட்கள் யாவை? அவற்றின் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் விவரித்து கூறி, அதன் ஒவ்வொரு பிரிவிற்கான, இரண்டு செய்மருந்துகளை, செய்முறை விளக்கத்துடன் எழுதுக. (20)

2. புடம் என்றால் என்ன? அதன் வகைகளைப் பற்றி உதாரணங்களுடன் தெளிவாக கூறுக. (10)

3. மருந்துகள் எத்தனை வகைப்படும்? அதில் தேரையர் கூறிய வெளிபிரயோக மருந்துகளைப் பற்றி, விவரித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக. (20)

SECTION B

4. அயத்தின் சிறப்பு யாது? அயத்தை கொண்டு செய்யப்படும் மருந்துகளின் செய்முறைகளைப் பற்றியும், அளவு, அனுபானம், தீரும் நோய்களைப் பற்றி விவரித்து கூறுக. (15)





5. வாசுகி, சுடர் கொடியோன், கணவாய் ஒடு, பூவழலை — இந்த மருந்துகளின் சிறப்பை பற்றி விளக்கி கூறுக. (15)

6. சிறு குறிப்பு வரைக :

(அ) வெடியுப்பு சுண்ணம்.

(ஆ) காடிகார செந்தூரம்.

(இ) தாளக எண்ணை

(ஈ) மேக விரணகளிம்பு.

(உ) சர்வ சுர குளிகை. (5 × 4 = 20)

# APRIL 1998

[SV 1109]

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part II

Paper II — GUNAPAADAM — DHAATHU

(குணபாடம் — தாது)

Time : Three hours | Maximum : 100 marks

Artswer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. சித்த மருந்துகள், வயதுகேற்ப எவ்வாறு பிரித்து வழங்கப் படுகிறது? மருந்துகேற்ப அனுபானம், துணைமருந்துகளைப் பற்றி எடுத்துகாட்டுகளுடன் விளக்குக. (15)

2. உலோகங்களின் வகைகள் யாவை? அயகுங்கரம், வாதத்திற்கு உயிர், மாரசம் மேற்கூறிய மருந்துகளின் வேறுபெயர்களை எழுதி, அதனின் சிறப்பையும், அதனை கொண்டு செய்யப்படும் மருந்துகளைப் பற்றியும் விவரித்து கூறுக. (15)

3. சித்த மருத்துவத்தின் "பஞ்ச சூதம்" எவ்வாறு சிறப்பு அடைகிறது விவரி. ரசத்தின் பொது குணம், சுத்தி, செய் மருந்துகள், ரசம் பகைத்தால் செய்யும் குணம், ரச நஞ்சு முறிவு, ரசத்தின் பத்தியம் பற்றி கூறுக. (20)

## SECTION B

4. பாடாணங்கள் வகைகளை கூறி, அவற்றில் தாளகம், மனோசிலை, மிர்தார்சிங்கி, வெள்ளை பாடாணம், இவற்றின் சுத்தி, பொதுகுணம், சேரும் முக்கிய மருந்துகளைப் பற்றி கூறுக. (20)

5. சித்த மருத்துவத்தில், 'உபரசத்தின்' பயன் யாது? இவற்றில் உள்ள முக்கிய மருந்துகளைப் பற்றி கூறி, அதன் செய்முறை, மருத்துவ பயன், அளவு பற்றி கூறுக. (15)

6. ரசகந்தி மெழுகு, சிற்றண்ட மெழுகு, விஷ குழம்பு, லிங்க கட்டு தயிர்சுண்டி சூரணம் — சிறுகுறிப்பு வரைக. (15)

---

## OCTOBER 1998

# [SM 1109]

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part II

Paper II — GUNAPAADAM – DHAATHU

(குணபாடம் – தாது)

Time : Three hours Maximum : 100 marks

Answser ALL questions.

1. (அ) புடத்தின் வகைகளை உதாரணங்களோடு வரைக. (5)

(ஆ) குழித்தைலக் கருவியின் அமைப்பைக் கூறி இதன்மூலம் செய்யப்படும் ஏதாவதொரு தைலத்தின் செய்முறையை விளக்குக. (10)

2. (அ) செம்புச் சத்துள்ள தாவரப் பொருட்களை கூறுக. (5)

(ஆ) கால்புத்தி, பூவிந்து நாதம் என்பது யாது? இவற்றின் சுத்தி முறையினை விளக்குக. (10)

(இ) செம்பு சேரும் மற்ற உலோகக் கலவைகளை கூறுக. (5)

3. (அ) செயநீருக்கு ஆதிப்பொருள் யாது? இதனைக் கொண்டு செய்யப்படும் மருந்து ஒன்றினை கூறி அதன் செய்முறை, அளவு, பயன் – இவற்றை விளக்குக. (10)

(ஆ) அன்னபேதியை பயன்படுத்தும் பொழுது கடைபிடிக்க வேண்டிய விதிகள் யாவை? (5)

4. (அ) பஞ்ச பூத உப்புக்கள் யாவை? அவற்றில் ஏதாவதொன்றின் சுத்தி முறையை விவரி. (5)

(ஆ) மேகச் சூலைக்கு சிறப்பாக பயனாகும் சுண்ணம் ஒன்றினை கூறி, அதன் செய்முறை, அளவு – இவற்றினை விளக்குக. (10)

5. வெள்ளியின் வேறுபெயர், சுவை, வீரியம், பிரிவு, குணம், சுத்தி, வெள்ளி பற்பம் செய்முறை, அளவு, துணை மருந்து, தீரும் நோய் இவற்றினை விளக்குக. (15)

6. சிறு குறிப்பு வரைக : (20)

(அ) மகா மண்டூரம்

(ஆ) நீலாஞ்சன மை

(இ) சர்வ விட தோடாரிக் குளிகை

(ஈ) அப்பிரக நவநீதம்

(உ) சண்ட ரச பற்பம்.

APRIL 1999

**[SG 1109]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION

Part II

Paper II – GUNAPAADAM – DHAATHU

(குணபாடம்–தாது)

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

SECTION A

1. கந்தகத்தின் வேறுபெயர், வகை, குணம், சுத்தி, மருந்து முறைகள் நச்சு குறிகள் அதன் மாற்று மருந்துமுறை பற்றி விரிவாக எழுதுக. (20)

2. உபரசங்கள் எத்தனை? அப்பிரகம் பற்றி நீ அறிந்ததை விரிவாக எழுதுக. (15)

3. குறிப்பு வரைக :

பூர்ண சந்திரோதயச் செந்தூரம்

அயசம்பீர கற்பம்

நவஉப்பு மெழுகு (15)

SECTION B

4. (அ) தைலம் பிறப்பிலும், ஆட்சியிலும் எத்தனை வகையாக பிரிவுபடும்? விரிவாக எழுதி ஒவ்வொன்றிற்கும் ஒரு தைலப் பெயர் உதாரணம் கொடு. (10)

(ஆ) குப்பி புடத்தைலம் – செய்முறை விளக்கம் படத்துடன் விவரி. (10)

5. 'பவழம்' என்பது யாது? சித்த மருத்துவத்தில் எவ்வாறு பயன்படுகிறது? (15)

6. பூரப்பொடி, திரிதோடமாத்திரை, வெள்ளை மெழுகு அன்னபேதிச் செந்தூரம், தங்க உரம் – செய் முறை அளவு, தீரும் நோய் பற்றி விரிவாக கூறு. (15)

---

OCTOBER 1999

**[KA 1109]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION

Part II

Paper II — GUNAPAADAM – DHAATHU

(குணப்பாடம் — தாது)

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

SECTION A

1. 'ஈகை' என்பது யாது? அதன் குணம், சுத்தி, மருந்து முறைகள் சிறப்பு ஆகியவற்றை விரிவாகக் கூறுக. (20)

2. (அ) கருவங்கம், வெள்ளைப்பாடாணம், வெங்காரம், முத்து, சிலாசத்து இவற்றின் சுத்தி முறையைக் கூறுக. (10)

(ஆ) பூநீறு — பற்றி விரிவாகக் கூறுக. (5)

3. குறிப்பு வரைக : (15)

(அ) கல்வம்.

(ஆ) குடிநீர்.

(இ) சுண்ணம்.

(ஈ) கந்தக சுடர் தைலம்.

(உ) நண்டுக்கல் பற்பம்.

SECTION B

4. பசை, களிம்பு, வர்த்தி, பற்று, புகை — ஆகிய புற மருந்து முறைகளின் இயல் கூறி ஒவ்வொன்றிற்கும் இரண்டு செய்முறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (20)

5. (அ) அயம், தங்கம், வங்கம், தாமிரம் — ஆகிய சத்துள்ள மூலிகைகள் யாவை? (5)

(ஆ) இவ்வுலோகங்களின் பொது குணத்தையும் சிறப்பையும் பாடலுடன் விரிவாக எழுதுக. (10)

6. பதங்கம் என்றால் என்ன? படத்துடன் விளக்கி இம்முறைப்படி செய்யப்படும் மருந்துமுறை ஒன்றைக் கூறுக. (15)

---

## APRIL 2000

## [KB 1109]

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

(Revised Regulations)

Paper II — GUNAPAADAM — DHAATHU

குணபாடம் — தாது

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

### SECTION A

1. செம்பின் வேறு பெயர், வகை, குணம், சுத்தி மருந்து முறைகள், நச்சுத் தன்மை, அதன் மாற்று மருந்து முறை பற்றி விரிவாக எழுதுக. (20)

2. சிலாசத்து என்பது யாது? அதன் வகை, வேறு பெயர் சுத்தி முறை, ரசாயனக் கலவை, மருந்து செய் முறைகள் தீரும் நோய்கள் ஆகியவற்றை விரிவாக எழுதுக. (15)

3. குறிப்பு வரைக :

(அ) பூநீறு

(ஆ) மயனத் தைலக் கருவி

(இ) கந்தக ரசாயணம்

(ஈ) நண்டுக் கல் பற்பம்

(உ) வெடியுப்புச் சுண்ணம். (15)

### SECTION B

4. இலிங்கம்—சிறப்புத் தன்மை, வேறு பெயர், சுத்தி வைப்பு முறை, ரசம் எடுக்கும் விதம், இலிங்கச் செந்தூரம் செய்முறைகள் பற்றி விரிவாகக் கூறுக. (20)

5. (அ) மனோநிலையின் மருத்துவ பயன்களை பற்றி விரிவாகக் கூறு. (5)

(ஆ) வளையலுப்பு என்பது யாது? அதன் செய்முறையைக் கூறி சேரும் மருந்து ஒன்றின் செய்முறையைக் கூறு. (10)

6. காவிக் கல் சூரணம், வசந்த குசுமாகர மாத்திரை அயபிருங்க ராச பாணிதம், அப்பிரக நவநீதம் வீரக் களிம்பு இவற்றின் செய்முறை; அளவு, தீரும் நோய் இவற்றைக் கூறுக. (15)

———————

**OCTOBER 2000**

**[KC 1109]**

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

(Revised Regulations)

Paper II — GUNAPAADAM — DHAATHU

குணபாடம் — தாது

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

Answer Sections A and B in separate answer books.

## SECTION A

1. வெள்ளி — பற்றி சித்த மருத்துவ நூல் கூறுவனவற்றை விரிவாக எழுதுக. (20)

2. நாகம், பவழம், கல்நார், படிகாரம், வீரம் இவற்றின் குணத்தையும், சுத்தி முறையையும் கூறுக. (15)

3. வெடியுப்புச் சுண்ணம்

அயவீரச் செந்தூரம்

தாளகக் கருப்பு

மண்டூராதி அடை குடிநீர்

மத்தன் தைலம்

— இவற்றின் செய்முறை, தீரும் நோய்களைக் கூறுக. (15)

## SECTION B

4. (அ) அக, புற மருந்து தொகுப்புகளை ஆயுட்காலத்துடன் கூறு. (10)

(ஆ) குடிநீர் வடிக்கின்ற விதியை எடுத்துக்காட்டுடன் கூறு. (5)

(இ) பற்று, பூச்சு என்பதின் வேறுபாட்டினை விளக்கி ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் கூறு. (5)

5. (அ) காரசாரம் — எத்தனை? அவற்றை கூறி பிடாலவணம் இந்துப்பு இவற்றின் வைப்பு முறையைக் கூறுக. (10)

(ஆ) திராவகம் என்றால் என்ன? பயன்படும் கருவியை படத்துடன் விளக்கு. செய்முறை ஒன்றைக் கூறுக. (5)

6. குறிப்பு வரைக : (15)

கந்தக சுடர் தைலம்

காடிக்காரச் செந்தூரம்

பஞ்சலவண பற்பம்

நீலாஞ்சன மை

குன்ம குடோர் மெழுகு.